நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a [illegible]   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம்:- 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   ஆனி 03   (17 - 06 - 1992)   புதன்கிழமை   ஓசை: 120

## அதிகாரி இன்மையால் முறைசாரா கல்வி பாதிப்பு

யாழ்.மாவட்ட முறைசாரக்கல்விப் பிரிவிற்கான வளந்தோர் கல்வி அதிகாரி பதவி இதுவரை நிரப்பப்படாமையால் இவ் ஆண்டுக்கான தொழில்திறன் அபிவிருத்தி பயிற்சி நெறியை ஆரம்பிக்கமுடியாத சூழ் நிலை உருவாகியுள்ளது இதனால் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சியை பெறமுடியாத நிலையில் உள்ளனர். மேற்படி பதவிக்கு ஒருவரை நியமிப்பதில் பல மாதங்களாக இழுபறி நிலை இருந்து வருவது தெரிந்ததே. பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு வெளியேறியவர்கள் தமது எதிர்காலத்திற்கான வாழ்க்கைத்திறன் கல்வியை மேம்படுத்துவதற்கான தொழில்திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறி யாழ். (4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது; தமிழ் குழுக்களிடம் பிரேமா தெரிவிப்பு;

## தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு முரணானதாம்

(கொழும்பு)

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கான மொத்தத் தீர்வின் ஒரு பகுதியாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட முடியாது" இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தம்மைச் சந்தித்த தமிழ்க்குழுக்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

கொழும்பில் நேற்று முன் தினம் பல்வேறு தமிழ்க்குழுக்களையும் சந்தித்துப் பேசிய அவர், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இணைப்பு குறித்து தெரிவிக்கப்பட்டதற்கு முரணாக எதுவும் செய்யப்படமாட்டாதெனவும்வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்று காணப்படவேண்டும் என்றால் அதற்கு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படவேண்டும் என்று தமிழ்க்குழுக்கள் சிறிலங்கா அரசாங்கத்தைக் கோரியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### மன்னாரில் வயிற்றோட்டம்

மன்னாரில் மீண்டும் வயிற்றோட்டநோய்தீவிரமாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனைகளிலும் மருந்துக்கடைகளிலும் இந் நோய்க்கான மருந்துகள் போதியளவு இல்லாததினால் நோயாளிகள் அவதியுறுவதாகவும் இதனால் நோய் தீவிரமாக பரவிவருவதாகவும் குழந்தைகள் சில மரணத்தை தழுவியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### யு.எஸ். எயிட் உதவியுடன்

## விவசாய அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

"யு. எஸ். எயிட்" ஸ்தாபனத்தின் உதவியுடன் அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் புதிய விவசாய அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுவருகின்றது. இத்திட்டத்தைத் தயாரிக்கும் வேலைகளில் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

இத்திட்டத்தின் தயாரிப்பு வேலைகள் நிறைவடைந்ததும் அகில உலக ஹெயர் ஸ்தாபனத்தினூடாக மேற்படி நிறுவனத்தின் பரிசீலனைக்காக திட்டத்தின் நகல் அனுப்பி வைக்கப்படவிருக்கிறது இந்த ஆண்டுக்கான திட்டத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்வகையிலே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு நான்கு அம்சத் திட்டம்

### தமிழ்க் குழுக்கள் அறிவிப்பு

[கொழும்பு]

ஏழு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் நேற்று முன் தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் இருபத்தைந்து நிமிட நேரம் நடைபெற்றன என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான நான்கு அம்சத் திட்டம் ஒன்றை தாங்கள் வகுத்துள்ளதாக தெரிவித்த தமிழ்க் கட்சிகள் அத்திட்டத்தை பிரேமதாசாவிடம் எடுத்துரைத்தனர்

வடக்கு -கிழக்கு இணைப்பு, முஸ்லிம்களுக்கு தனியான அதிகாரப்பரவலாக்கல் அலகு, பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வைக் காணும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல், வடக்குக் கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் சிறுபான்மையினர் அனுபவிக்கும் உரிமைகளை வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு வழங்குதல் ஆகியனவே இத் திட்டத்தில் அடங்கியுள்ள நான்கு அம்சங்களாகும்.

இதேநேரம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பொதுக் கருத்தைத் தான் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக பிரேமதாசா அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

### எறிகணை வீச்சிற்கு அஞ்சி

## பாதுகாப்பு வலயத்தில் மக்கள் தஞ்சம்

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களிலிருந்து தமது உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் யாழ். நகர மக்கள் நள்ளிரவு வேளைகளில் பாதுகாப்பு வலயத்திற்குள் தஞ்சமடைவதை அவதானிக்க முடிகிறது.

கடந்த சில நாட்களாக சிறிலங்கா இராணுவம் மக்கள் செறிவாக வாழும் குடியிருப்புகள், ஆலயங்கள், அகதி முகாம்கள் ஆகியவற்றின் மீது கோரத்தனமான [4 ஆம் பக்கம் பார்க்க]

### ஜோசப் முகாம் சம்பவம்

## மேலும் இராணுவத்தினர் ஆஸ்பத்திரியில் மரணம்

கடந்த நான்காம் திகதி இரவு வவுனியா இராணுவ முகாமில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூடு நடவடிக்கையின் போது காயமடைந்த மேலும் சில இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலையில் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திடீர் என்று இராணுவத்தினரின் துப்பாக்கிகளை பறித்து தாக்குதல் நடாத்திவிட்டுச் சென்ற கைதிகள் கைது செய்யப்படவில்லை என்றும் சொல்லப்பட்டது.

வவுனியா நகரில் இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாம். (தி)

## 4 இலங்கை தமிழ் இளைஞர் தமிழ் நாட்டில் கைது

(சென்னை)

சென்னை கோடம்பாக்கத் ...

... பது தமிழ் இளைஞர்களுடன் தங்கியிருந்த இவர்கள் தம்மை

இத்திட்டத்தின் தயாரிப்பு கப்படுகிறது. (க)

## மேலதிக அரச அதிபர் பதவி அதிகாரிகளிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் வெற்றிடமாக உள்ள பதவி ஒன்றுக்காக சில அரச அதிகாரிகளிடையே பதவிப் போட்டி நிலவிவருகிறது. இம்மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபருக்கான பதவிக்கே இப்போட்டி நிலவுகிறது.

ஒரு பெண் அதிகாரி உட்பட மேலும் இரு அதிகாரிகள் மேற்படி பதவிக்காக போட்டியிட்டு வருவதாக கூறப்படுகிறது.

எனினும் போட்டியிடும் பெண் அதிகாரி மேற்படி பதவிக்கு உசிதமற்றவர் என

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறந்த தமிழீழ நூல்களுக்கு பரிசு வழங்க முடிவு

[கொழும்புத்துறை]

தமிழீழத்தில் வெளிவரும் தரமான இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்களுக்கு பரிசுகளை வழங்குவதற்கு யாழ் மாநகரசபை சனசமூகநிலையங்களின் சமாசம் முடிவு செய்துள்ளது.

நூலாசிரியர்களும், வெளியீட்டாளர்களும் தமது நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் கவிதை நூல்கள் இலக்கியம் மற்றும் பல்துறை நூல்களின் இருபிரதிகளைப் பரிசீலனைக்காக அனுப்பிவைக்குமாறும் நூலாசிரியர்கள் இவ்விடயமாக இல.33, பருத்தித்துறை வீதியில் உள்ள சமாசப் பணிமனையில் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சமாசத் தலைவர் திரு.டானியல் அன்ரனி தெரிவித்துள்ளார்.

### வவுனியா மாவட்டம்

## சர்வோதய இணைப்பாளர் பணத்துடன் தலைமறைவு

(வவுனியா)

வவுனியா மாவட்ட சர்வோதய இணைப்பாளர் ஐந்து லட்சம் ரூபா பணத்துடன் தலைமறைவாகி விட்டார் என்று வவுனியாப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

அநுராதபுரம் பிராந்திய சர்வோதய இணைப்பாளர் டபிள்யு. எம். குணசேகரா இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார் என்று வவுனியாப் பொலிசார் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

வவுனியா மாவட்ட சர்வோதய இணைப்பாளருடன் சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த மேலும் நால்வர் தலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் வரை ரயில்பாதை

(வவுனியா)

கொழும்பு - வவுனியா யாழ் தேவி ரயில் நேற்று முன்தினம் முதல் தாண்டிக்குளம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப ரயில் பாதைகள் சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

டிக்கு தீர்வு காண்பதற்கான நான்கு அம்சத் திட்டம் ... கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ... ளார்.

### முற்றுகையிட முயன்ற இராணுவம் மீது

## விடுதலைப்புலிகள் தாக்குதல் கரடியனாற்றில் 4 இராணுவம் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்ததாக பி.பி.சி தெரிவித்தது.

## ஊர்காவற்றுறையில் மோதல் இரண்டு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இம் மோதலில் இரண்டு விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை அறிவழகு (ஜோசப் வின்சன் - இலந்தமோட்டை, மன்னார்தீவு), செம்பியன் (சுபாஸ்-பிரன்சிஸ் றொபின்சன், 10-ம் வட்டாரம் புங்குடுதீவு ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

### வீரச்சாவு



வீரவேங்கை பழனித்துரை

13-06-1992 அன்று யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் வீரச்சாவு அடைந்த வீரவேங்கை பழனித்துரை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தீவுப்பகுதி இராணுவம் எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் அங்கு அமைந்திருக்கும் முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10-30 மணியில் இருந்து நண்பகல் ஒருமணி வரை தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை அராலி, கல்லுண்டாய் வெளி ஆகிய பகுதிகளை நோக்கி மேற் கொண்டவாறு இருந்தனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற வேளை இரவு 12-00 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று அராலியையும் அதனை அண்டிய பகுதிகளையும் சுற்றி வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது.

இப்பகுதிகளில் இராணுவத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சுதந்திரக்கட்சிக்கு கே.ஜி.பி. நிதியுதவி சிறிமாவோ மறுப்பு

முன்னதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்னைய பாராளுமன்றில் கொண்டிருந்த ஆசனங்களைவிட 1989 இல் எட்டுமடங்கு ஆசனங்களை பெறுவதற்கு கே.ஜி.பி உதவி அளித்ததாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கே.ஜி.பி.யுடன் அந்தரங்க தொடர்புகளை கொண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியையும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலர் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கே.ஜி.பி. உதவி இருப்பதாக 1989 மார்ச்சில் கே.ஜி.பி. தலைவரான விளாடிமிர் கிரியுச்கோவ் கட்சியின் பொதுச் செயலாளர் மிகைல் கொர்பசேவுக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தரப்பட்ட ஆதரவுக்காக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் நாட்டில் கைது

(சென்னை)

சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த கொடத்தூர் என்ற இடத்தில் நான்கு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ஒன்பது தமிழ் இளைஞர்களுடன் தங்கியிருந்த இவர்கள் தம்மை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யாததினாலேயே கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

### தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு

## எரிபொருள் கடத்தியதாக இலங்கை இளைஞர் கைது

தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் களைக் கடத்தியதாகச் சந்தேகத்தின் பேரில் இலங்கை வாலிபர் ஒருவரை தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தமிழகத்தின் காரைக்கால் நாகபட்டினம் கரையோரத்தில் வெற்றுப்படகொன்று கடந்த வாரம் கைப்பற்றப்பட்டதோடு இலங்கைத் தமிழ் வாலிபரும் கைது செய்யப்பட்டார். கடந்த ஆறுமாதங்களாக யாழ்ப்பாணத்திற்கு டீசல், பெற்றோல், மண்ணெய் ஆகியவை கடத்தப்படுவதாகத் தெரிவிக்கும் தமிழகப் பொலிசார் இதனை அதற்குச் சான்றாகக் காட்டியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் கூலிக்கு அமர்த்தப்பட்ட கடத்தல்காரராக இருக்கலாம் என பொலிசார்தெரிவித்தனர்

## இந்திய சட்ட வல்லுநர் சிறிலங்கா வரலாம்

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கையிடம் உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடுவதற்கு முன்னர் இலங்கையின் சட்ட ஏற்பாடுகளை ஆராய்வதற்காக இந்திய குற்றவியல் புலனாய்வு தாபன சட்ட வல்லுநர் இலங்கை வரலாம் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் வருவதற்கான அனுமதியை இலங்கை வெளிவிவகார அமைச்சு வழங்கியுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## வரி விளம்பரம்

### உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

உருப்பராய் ஒஸ்கா.வி.க. நடாத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆடும் அணிகள் பாடும்மீன் A)யை எதிர்த்து சென்றொக்(A) மோதும் இவ்வாட்டம் கோண்டாவில் குமான் மை தானத்தில் 17-6-92 புதன் 4.30 மணிக்கு நடைபெறும். (2684)

### விற்பனைக்கு

இருப்பு வேலைத்தலத்திற்கு உடயோகமான ஆயுதங்கள், சிங்கர்ஜதயல் மெஷின், லினோனியம், தமிழ்/ஆங்கிலம் தட்டச்சுக்கள் Bottle Coolers, Deep Freezer, Air Conditione வீட்டுப்பாவனைப் பொருட்கள் - ஜெயா ஓஷன்மாட், டாஸ் கொம்ப்ளெசஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (2687)

### முல்லையில் விமானக் குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம், தண்ணீரூற்று நெடுங்கேணி, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் மீண்டும் விமானக் குண்டு வீச்சுகள், எறிகணை வீச்சுகள் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் குண்டு வீச்சுக்களால் அப்பகுதியில் வாழும் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

நாயாற்றுப் பகுதிக் காடுகள் மீது எரிகுண்டு வீச்சுக்கள் நடைபெற்று வருவதால் காடுகள் தீப்பற்றி எரிகின்றன.

# ஊவா மாகாண தோட்டங்களில் மீண்டும் இளைஞர்கள் கைது

## -பதுளை மாவட்ட எம். பி. தகவல்

[பதுளை]

ஊவா மாகாண தோட்டங்களில் தமிழ் இளைஞர்கள் மீண்டும் பொலிசாரால் அநாவசியமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகின்றனர் என்று பதுளை மாவட்ட எம்.பி. டி.வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

இவர் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றிலேயே இதுபற்றித் தெரிவித்துள்ளார். மேலும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது;

இவ்வாறு இளைஞர்களை சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்தவேண்டும்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டிருப்பதால் சம்பந்தப்பட்ட தோட்ட மக்கள் மத்தியில் பதற்ற நிலை உருவாகியுள்ளது. இதனால் தோட்ட மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்றும்,

இவர்களை உடனடியாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் சென்னன் கேட்டுள்ளார்.

## பழுதடைந்த மா விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள விற்பனைத் திணைக்களங்களுக்கு வரும் மா முற்றிலும் பழுதடைந்துள்ளதாக விற்பனைத் திணைக்கள முகாமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது கப்பல் மூலம் வரும் மாமூடைகள் நிறை குறைந்தும் புழு பிடித்தது மாகவே உள்ளது எனவும் அவர் கூறினார்.

அத்துடன் இப்பொருட்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் களஞ்சியப்படுத்தும் போது முற்றிலும் பழுதடைந்த உணவாக இருக்கும் எனவும் அவர் கூறினார். (75)

## கொழும்பு வீதி விபத்துகள் மே மாதம் 25பேர் பலி

(கொழும்பு)

கொழும்பில் மே மாதம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 25பேர் பலியாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தமாதத்தில் மட்டும் 916விபத்துக்கள் ஏற்பட்டன என்றும் நாளாந்தம் சராசரி 29 விபத்துக்கள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பம்பலப்பிட்டியில் 03விபத்துக்களும், கறுவாக்காட்டில் 98 விபத்துக்களும், பொரளையில் 90 விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன.

இறந்த 25 பேரில் பதினைந்து பாதசாரிகள், ஐந்து பஸ் பயணிகள் மூன்று சைக்கிள் ஓட்டிகள் இரு மோட்டார் சைக்கிளோட்டிகளும் அடங்குவர்.

## கரையோரப் பகுதியில் பாலைமீன்வளர்ப்புத்திட்டம்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால், கடந்த ஆண்டு இறுதியில் குருநகரில் ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்த பாலை மீன் வளர்ப்புத் திட்டம் பூர்த்தியாகியுள்ளது.

இப் பரீட்சார்ந்த திட்டத்திற்கென இரண்டாயிரம் வரையிலான பாலை மீன் குஞ்சுகள் மன்னார் மாவட்டத்தில் கிராஞ்சியிலிருந்து கொண்டு வரபபட்டு குருநகர் வளர்ப்பு நிலையத்தில் விடப்பட்டன. 25 செ.மீ நீளத்துடனும், 5 கிராம் நிறையுடன் ...

...த்தில், 5 மாத காலத்தில் மீன்கள் சராசரியாக 24.8 செ.மீ நீளத்தையும், 87 8 கிராம் நிறையையுமே கொண்டிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடற்தொழிலாளர் பலர் வேலை வாய்ப்பினை இழந்துள்ளதுடன், மீனிற்கான விலையும் ஏற்றமடைந்துள்ளது இந் நிலையில் கடல் நீர்த்தொடுவாய்கள் மற்றும் கரையோர ஆற்றுப் பகுதிகளில் இவ்வாறான திட்...

## வைத்தியர்களுக்கான பதவி வெற்றிடம்

புதுக்குடியிருப்பில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு வைத்தியர்களுக்குரிய பல பதவி வெற்றிடங்கள் காலியாக உள்ளன எந்தத் தகுதியைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்

1. சம்பள விபரம்:

அரசின் சேவையில் இருந்து விலகும்போது பெற்ற சம்பளத்துடன், ஐ. நா சிறுவர் பாதுகாப்பு ஸ்தாபனமும் அளிக்கும் சகாயநிதியும் வழங்கப்படும்.

2. தகுந்த இருப்பிட வசதியும் உணவுக்கு ஏற்ற ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

3. மாதிரி விண்ணப்பப் படிவம்:

அ. முழுப் பெயர்:-
ஆ. விலாசம்:-
இ. பிறந்த திகதி:-
ஈ. தொழில் தகைமைகள்:
உ. கடைசியாக கடமையாற்றிய வைத்திய சாலையின் விலாசம்:
ஊ. வேறு தகைமைகள்:
எ. விண்ணப்பங்கள் 30-6-92க்கு முன்னர் தலைவர் நோ.ந பு. சங்க முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலை, புதுக்குடி...

## நினைவு கூருகின்றோம்...

### 1992-06-17

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழ் விவசாயிகள்.

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி, தென்னியன்குளப் பகுதியில இந்தியப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பளை தம்பகாமத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ரயில் வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கையில் வவுனியாவில் வைத்து தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொலைப்பட்ட யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த யாழ். பரி. யோவான் கல்லூரி மாணவன்.

1990 ஆம் ஆண்டு திருகோணமலை / மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் குட்டி [இராசலிங்கம் சிவானந்தம் - மேன்காமம், திருக்கோணமலை.]

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

நியாஸ் [மூதூர், திருக்கோணமலை.]

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

மாகிறெட் [சுறுப்பையா கிருஸ்ணகுமாரி - கணுக்கேணி மேற்கு, முள்ளியவளை, முல்லைத்தீவு]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு பெரிய நீலாவணை - 1 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

தாந்தா மலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை உட்பட 3 தமிழர்கள்.

மட்டக்களப்பு கிரான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்.

திருகோணமலை மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன் மற்றும் ஆஸ் தோட்டப் பகுதியில் படுகொலை செய்ய பட்ட தமிழர்கள்.

மல்வத்தையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொலைப்பட்ட சிற்றூரவைத் தலைவர்.

1991 ஆம் ஆண்டு வவுனியா குருக்களூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் ...

றன.

## மானியப் பணம் பெறவில்லை

(கொழும்புத் துறை)

யாழ் மாநகர சபைப்பகுதியில் அறுபத்தி நான்கு பதிவு செய்யப் பட்ட சன சமூக நிலையங்கள் உள்ள போதிலும் பதினான்கு சன சமூக நிலையங்கள் மட்டுமே 1991 ஆம் ஆண்டிற் குரிய மானியப் பணததை யாழ் மாநகர சபையிடமிருந்து பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய ஐம்பது சன சமூக நிலையங்களும் வருடாந்த மானியப் பணத்தைப் பெற முயலாது இலட்சியம் செய்து வருகின்றன எனவும் தெரிவிக்கபடுகிறது. (24)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கப் வருடாந்தபொதுக் கூட்டம் திருஅ ஜெயராஜன் அவர்கள் தலைமையில் 21-06-92 ஞாயிறு காலை 9-30 மணிக்கு வைத்தீஸ்வர கல்லூரிமண்டபத்தில்நடைபெறவுள்ளது. அன்றையதினம் இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் திரு வி. ஸ்ரீசக்திவேல் அவர்கள் அறிவிக்கின்றார்.

பட்டன. 25 செ.மீ நீளத்துடனும், 5 கிறாம் நிறையுடனும் விடப்பட்ட இம் மீன் குஞ்சுகள் 5 மாத காலத்தில் சராசரியாக 28.5 செ மீ நீள வளர்ச்சியுடனும், 175 0 கிறாம் நிறை வரையிலான வளர்ச்சியினைப்பெற்றுள்ளன

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட நீர்கொழும்பு பிற்றப்பண்ணை பரீட்சார்த்த பாலை மீன் வளர்ப்புத்திட்ட மற்றும் கரையோர ஆற்றுப் பகுதிகளில் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பலருக்கு நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கும் மீனிற்கான விலையேற்றத்தைக் குறைப்பதற்கும் தமிழீழத்தில் இனங் காணப்படாத வளங்களைக்கண்டறிந்து பயன் படுத்துவதற்கும் ஏதுவாக அமையும்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

கடந்த 18-05 1992 அன்று வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கலன்று மக்கள் சேவைக்காகச் சென்று சேவையில் ஈடுபட்டிருந்த நேரம் எறிகணை வீச்சால் காயமடைந்து பின் இறைவனடி சேர்ந்த முல்லை செஞ்சிலுவைச் சங்கப் பொருளாளர் அமரர் க. சண்முகலிங்கம். செஞ்சிலுவைத் தொண்டன் செல்வன் றஷி நிமால் (முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவன்) ஆகியோருக்கும் அன்றைய அசம்பாவிதத்தில் உயிர் நீத்த பொதுமக்களுக்கும் முல்லை மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் தனதுஅஞ்சலியைச்செலுத்துகின்றது.

செஞ்சிலுவைச் சங்கக் கிளை
முல்லை மாவட்டம்
(2686)

## "சூழல் பாதுகாப்பு - வாசகப் போட்டி"

❋ சூழல் பாதுகாப்பு ❋ காடு வளர்ப்பு
❋ சூழல் மாசடைதல் ❋ நீர்ப்பயன்பாடு

கருத்துக்குப் பொருத்தமான

**சிந்திக்க வைக்கும் வாசகங்களை (SLOGANS)**

**எழுச்சியூட்டும் முழக்கங்களை**

ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் எழுதியனுப்புங்கள்

**தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த வாசகங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்**

உறைமீது 'சூழல் பாதுகாப்பு வாசகப் போட்டி' என்று குறிப்பிட்டு அனுபப வேண்டிய முகவரி

சூழல் பாதுகாப்புப் பிரிவு,
தமிழீழ ஆய்வு நிறுவனம்,
தலைமைச் செயலகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வாசகங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01-07-92

(சி/4561)

தலைவர் நோ. ந பு. சங்க முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப் படல் வேண்டும்.

இன்றைய நிலையில் மக்களுக்கு மனமுவந்து சேவை செய்யும் மனப்பான்மை அவசியம் தேவை விடுமுறை வசதியோ, பிரத்தியேக தொழில் ஈடுபாடோ அனுமதிக்கப்பட மாட்டாது.

உப தலைவர் நோ. ந பு சங்கம்
முல்லை மாவட்ட வைத்தியசாலை
புதுக்குடியிருப்பு.

09-06-1992

(சி/4556)

## முதலாண்டுநினைவஞ்சலி



**இளம்புலி கீதா**

**(செல்வி தர்ஷினி திருச்செல்வம்)**

ஈழத்தாயின் மடியில ஈழத்தாயகமண்ணில்

17 10. 1975 17. 06. 1991

திதி வளர்பிறைசஷ்டி 05. 07. 1992

"பேனா ஏந்திய கைகள் இன்று துப்பாக்கி ஏந்துகின்றன முசலின் நாட்டு நிலைமையை யோசியுங்கள் .. தமிழீழம் கிடைக்கும்வரை போராடியே தீருவோம்" என்ற கீத வார்த்தையை முன்வைத்த கீதாவே உமக்கு என்றும் எங்கள் அஞ்சலிகள்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அம்பனை,
தெல்லிப்பழை.

அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, மற்றும் உறவினர்,
நண்பர்கள மகாஜனக் கல்லூரியினர்

[2674]

1991 ஆம் ஆண்டு வவுனியா குருக்களூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

ஜெகன் [காந்திராஜா - திருப்பழுகாமம், மட்டக்களப்பு]

பிறேமினி [மேரி லிற்றின் கார்மேலா அந்தோனிப்பிள்ளை - பெரியதம்பனை, வவுனியா.]

திரணா [ஜெயா பாலசுப்பிரமணியம் - 'அருள்வளவு' அல்வாய் மேற்கு]

கீதா [தர்சினி திருச்செல்வம் - அம்பனை, தெல்லிப்பழை]

வவுனியா செக்கடிப்புலவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

வேந்தினி [நேசமலர் கணபதிப்பிள்ளை - பன்குடாவெளி, மட்டக்களப்பு.]

லெப். சுதா [ஜெகநாதன் நாகேந்திரன் - கோவில்குளம், வவுனியா.]

2-ம் லெப். ராமன் [பழனி கிருஸ்ணமூர்த்தி - அரசன் குளம், ஓமந்தை, வவுனியா.]

2-ம் லெப். குணாளன் [சுந்தரம் ரவிசந்திரன் - மடுக்குளம், வவுனியா.]

கபில்ராஜ் [இராமசாமி ஜோன் ஜேக்கப் ஜஸ்ரின் - 4 ஆம் படிவம், பாவற்குளம், வவுனியா]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4580)

## சைவவித்தியாவிருத்திச்சங்க
## கேள்வி அறிவித்தல்

தகுதிவாய்ந்த நிறுவனங்களிடம்/ ஒப்பந்தகாரர்களிடம் இருந்து சிறுமேசைகள் - அலுமாரிகள் (cupboards) மரத்தினால் செய்து வழங்குவதற்காக பொறிக்கப்பட்ட கேள்விகளை சைவவித்தியாவிருத்திச்சங்கம் கோருகின்றது. குறிப்பிட்ட தளபாடங்கள் இனிசப்பு தவிர்ந்த அரசினால சிபார்சு செய்யப்பட்ட முதலாம் வகுப்பு மரத்தினால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

கேள்விப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 300 /- ஐயும் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 3000 /- ஐயும் அலுவலக நேரத்தில் சைவவித்தியாவிருத்திச்சங்க நிர்வாக பீடத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தையும் விபரக்கோவையையும் 1992 - 06 - 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்களை சங்க பொதுமுகாமையாளருக்கு 1992 - 07 - 08 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பொறிக்கப்பட்ட உறையில் நேரிலோ அல்லது பதிவுக்கடிதமூலமோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை சைவவித்தியாவிருத்திச்சங்க கேள்விச்சபைக்கு உண்டு.

கலாசாலை வீதி.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1992 - 06 - 11.
(4562)

வே. குகதாஸ்
பொது முகாமையாளர்,
சைவவித்தியாவிருத்திச்சங்கம்

### சிந்தனைக்கு

வயிறு பசிக்க விடுதலையே? என்று
நெஞ்சம் போடும் உணவினுக்காய்
எயிறு சிரிக்க அடிபிடித்தே - தமிழ்
இனத்தை அழிப்பது இழிசெயல்

— காசி ஆனந்தன்

ஈழநாதம்

51, ஸ்ரேசன்வீதி, யாழ்ப்பாணம் 17-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 61

## தமிழர் தாயகத்தை சிதைக்க துடிக்கின்றனர்

சிறிலங்கா அரசின் அடிப்படை நோக்கம் விடுதலைப்புலிகளை அழித்தல் என்பதை விட தமிழீழம் என்ற எண்ணக்கருவை இல்லாது ஒழித்தலேயாகும். ஆனால் இவ்எண்ணக் கருவை இல்லாது ஒழிப்பதானால் தமிழர்தாயகம் ஒன்றேகுறிக்கோளாகக் கொண்டு போராடும் விடுதலைப்புலிகள் ஒடுக்கப்படுவதோடு, தமிழர் தாயகம் துண்டாடப்படவேண்டும் எனச் சிறிலங்கா அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும், இராணுவத்தரப்பினரும் கருதுகின்றனர்.

''வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது ஈழத்திற்கான அடிப்படை அலகு. கிழக்கை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதினால் இது முறியடிக்கப்படும். இதன் மூலம் ஈழம் என்னும் அடிப்படை எண்ணம் தகர்க்கப்படும். அதாவது ஈழம் என்பதை இல்லாமல் செய்வதனால், அந்த எண்ணக்கருவையே இல்லாது ஒழிக்க வேண்டும்'' என சிறிலங்கா இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்ன தெரிவித்துள்ளார். இதிலிருந்தே சிறிலங்கா இராணுவத்தின் இலக்குபுலிகளை ஒழிப்பதன் மூலம் தமிழீழத்திற்கான எண்ணக்கருவையே இல்லாது ஒழித்தல் என்னும் நோக்கம் கொண்டது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்ணாவின் இச்சிந்தனை தனியாக அவரது மூளையில் உதித்த தொன்றல்ல. சிங்கள புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் உட்பட பலரது மூளையில் உதித்த தொன்றாகும். ஆனால் இதனை நிறைவேற்ற ஒவ்வொரு துறையினரும் தமது வசதிக்கேற்ப வழிமுறைகளைக் கையாண்டு விடுகின்றனர். பலர் குடியேற்றங்களை நிறுவுதன்மூலம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க திட்டமிட்டனர் புனிதப் பிரதேசங்கள் என சிலர் புறப்பட்டனர். அபிவிருத்தித் திட்டங்கள் என பலர் ஆக்கிரமிப்புத்திட்டம் தீட்டினர்.

# யூதர்களுக்கு எதிராக ஹிட்லர் கூட இவ்விதம் நடந்து கொள்ளவில்லை

## முன்னாள் லெப். கேணல் அன்ரன் செல்லத்துரை சிறிலங்காவின் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணாவிற்கு எழுதிய பகிரங்கக் கடிதம்

மதிப்புக்குரிய ஜெனரல் சிறில் அவர்களுக்கு,

1. இராணுவத் தளபதியாக நீங்கள் ஓரளவு காலங் கடந்தேனும் நியமிக்கப்பட்டமை தொடர்பாக உங்களுக்கு முதலில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன்

2. ஆர்வமுள்ள இரண்டாம் லெப்டினன்டாக ஏ. படையணியின் அலுவலகத்தில் உங்களை முதன் முதலில் பதிவு செய்த அன்றைய நாள் எனது ஞாபகத்தில் இன்னமும் பசுமையாக உள்ளது. அச்சமயத்தில் எதிர்காலத் தளபதி ஒருவரை சந்திப்பதாக நான் உணரவில்லை அமைதியான செளக்கியமாக இருந்த எமது தீவில் திடீர் மாறுதல்கள் ஏற்பட்டு இன்றைய நிலை ஏற்படும் என்று எவரும் எதிர்வு கூறியிருக்கவில்லை இருந்தும் உண்மையாகவே உமது நிலை கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

3. புத்திசாலித்தனமாகவும், நேர்மையாகவும் உமது மக்களுக்கு விசுவாசமாகவும் கடந்த காலத்தில் சேவையாற்றியுள்ளீர்கள் அரசு தனது எதிரியாகக் கருதும் தமிழ் மக்களுக்கு எதிராக போர் நடத்த, உமது துருப்புக்களை வழிநடத்த வேண்டிய நிலையில் அரசும் பௌத்தகுருமாரும் கூறியவற்றிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கும் நீங்கள் தமிழ் மக்களின் தர்மீக பொருளாதார நியாயங்கள் பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். பௌத்த சிங்களவாதி என்ற வகையில் அவர்களது கருத்துக்களை கேள்விக்கு இடமின்றி ஏற்றுக்

தவிர்க்க முடியாத தேவையாகும். தமிழர் தேசிய இனத்தை தமக்கு சமமானவர்களாகக் கருதவேண்டியது இதற்கு அவசியமாகும். இந்த மாற்றம் ஏற்படுமானால் சிங்கள மக்களும் அவர்களது தேசமும் மிகப்பெரும்நன்மையை அடையும். அநியாயமாகப் போன சக்தி அனைத்தையும் பொருளாதார கலாசார துறையில் மீண்டும் பயன்படுத்துவதற்கு அமைதி சகவாசமிடும் பொருளாதார மந்த நிலை மாறுவதற்கும் இது வழிவகுக்கும். இவ்வாறு அண்மையில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய டாக்டர் சச்சிதானந்தன் கூறியதை உங்களுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் கடந்த ஆண்டில் மட்டும் ரூபா 16 7 மில்லியன் பாதுகாப்பு செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டது.

5. இதுஎவ்வளவு அநியாயம். மூன்றாவது பந்தியின் போது '' உமது மக்களுக்காகவும் '' என்ற வார்த்தையை நான் பிரயோகித்தேன். ஆனால் உமது மக்கள் எந்த தேவையும் இன்றி தமிழ் மக்களை ஆயுதம் தாங்கிப் போரிட நிர்ப்பந்தித்துள்ளனர்.

நான் தவறாகச் சொல்லவில்லையானால் பிரபாகரனையும். தமிழ்ப் புலிகளையும் தமிழ் மக்களின் எண்ணங்களுக்குச் செவி கொடுக்கவும், அவர்களது விருப்புக்களை ஏற்கவும் மறுத்து வரும் சிங்கள பேரினவாதம் தோற்றுவித்தது எனலாம். தமிழர்களின் திறமையின் சின்னமான யாழ் நூல் நிலையத்தை வெட்கக் கேடான முறையில் எரித்ததன் மூலமும், கண்மூடித்தனமாகக் குண்டுகளைப் போடுவதன்

துவம் ஒன்றின் கீழ் காலம் காயங்களை ஆறப் பண்ணும் என்றும், வெறுப்புணர்வு நீங்கி நட்புறவு மலரும் என்றும் நம்புபவர்கள் இல்லாமல் இல்லை. தென் ஆபிரிக்காவிலேயே கூட இனவாதம் தோற்கடிக்கப்பட்டு வருகின்றமை இதற்குத் தகுந்த ஒரு முன்னுதாரணமாக இருக்கலாம்.

6 தமிழ் மக்களுக்கு அவர்களுக்கே உரித்தான சுய நிர்ணய உரிமையை வழங்குவதற்குச் சிங்கள மக்கள் ஏன் அஞ்ச வேண்டும்? இதற்குப் பொருத்தமான ஒரு காரணத்தை என்னால் கண்டுபிடிக்க இயலவில்லை இப்போதும் ஸ்கொட்லாந்தும் வேல்ஸும் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிய விரும்புமாயின் அதனை ஜனநாயக பூர்வமான விருப்பத்தைப் பிரிட்டன் அரசாங்கம் மறுதலிக்கப் போவதில்லை. அப்படியிருக்க, சிறிலங்கா அரசாங்கமும் இத்தகைய மிதவாதப் போக்கைக் கைக்கொள்வதற்குத் தடையாக என்ன காரணம் இருக்கக் கூடும். இரண்டு தேசிய இனங்களும் தமக்கிடையேயான சுதந்திரத்தைப் பேணும் அதேவேளை ஐரோப்பாவில் இருக்கும் அரசுகளைப்போல பொது நலன்களைப் பேண ஒத்துழைக்கவும் தாயகத்தின் பாதுகாப்பையும், கௌரவத்தையும் பேணவும் ஏன் முடியாது.

இணக்கப்பாடு காண்பது பிரதேச வரைவறை செய்வதற்கும், அதிகார மாற்றங்களுக்கும் இட்டுச் செல்லக் கூடும். இதற்காகப் பெரும்பான்மையினர் மட்டுமன்றி ஏனைய இனத்தவர்களின் கருத்துக்களும் கவனத்திற்கு எடுக்கப்படல் வேண்டும்.

பொறுத்து அமைய வேண்டுமேயல்லாது அவளைப் பொறுத்ததாக அல்ல. சிங்கள பௌத்த பேரினவாதம் ஏனைய மக்களின் விருப்பத்தை ராஜதந்திரமாக ஒடுக்குவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. மறுபக்கத்தில் டாக்டர் எஸ். சுக்மார் பிரசித்தி பெற்ற ''சிறியது அழகுடையது'' என்னும் நூலில் சுட்டிக்காட்டியுள்ளதைப் போல சிறிய நாட்டை நிர்வகிப்பது என்பது இன்னும் இலகுவான ஒன்றாகும்.

7. இப்போது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான போரில் உங்கள் படையணிகளையும், படைக்கலங்களையும் ஈடுபடுத்துவதன் நோக்கம் என்ன? புலிகளை அழிப்பது என்ற போர்வையில் தமிழ் மக்களை இனப் படுகொலை செய்வதற்காக நீங்கள் முற்படுகின்றீர்கள் என்பதைத் தவிர மக்கள் புலிகளாகவும், புலிகள் மக்களாகவும் இரண்டறக் கலந்து போயுள்ளதொரு நிலை இருக்கின்றது யாழ்ப்பாணத்தை வெல்லும்போது என்ன மிச்சமாக இருக்கும்? தமிழ் மக்களை அடிமைகளைப்போல நடத்த முடியும் என்று நம்புகிறீர்களா? வட அயர்லாந்து நிலையை அல்லது லெபனான் நிலையைத்தான் ஏற்படுத்த அரசு விரும்புகின்றதா? அல்லது அதனைத் தவிர்க்க விரும்புகிறதா? வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழர்களின் நிலையில் நீங்கள் இருந்தால் என்பது பற்றி எண்ணிப்பாருங்கள் தமிழர்களை அழிக்கவும், அவர்களது சொத்துக்களை நாசமாக்கும்படியுமா கௌதம புத்தர் பௌத்தசிங்கள இனத்தினருக்குப் போதனை

நாங்கள் மீண்டும் ஒரு சோழப் படையெடுப்பை விரும்பவில்லை ஆகவே தீவிலுள்ள தமிழர்களை நண்பர்களாகக் கணித்து அவர்களது நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் வென்றெடுப்பதன் வாயிலாக பரஸ்பர நலன்களைப் பேணுவதோடு பொருளாதார பரதேச இறைமையையும் பேணுவதற்கு வழி செய்யப்படவேண்டும். நீண்டகாலமாக இது எதிர்பார்க்கப்பட்டபோதிலும் கூட பலமான வரலாற்றுப் பின்னணியும், இனவாத எண்ணமும் வன்மமும் கொண்டவர்களால் சிறுபான்மைத் தமிழர்களை வென்றெடுக்கமுடியவில்லை என்பதுடன், சிங்கள மனோபாவத்தின் காரணமாக தமது இனத்தை எதிர்கொள்ளும் அபாயத்தையும் உணர்ந்து கொள்ள முடியவில்லை அவர்கள் இதனைக் கண்டு கொள்ளாத குருடர்களாக உள்ளனர்.

9. மடங்களிலேயே முடங்கிப்போய்க்கிடக்கும் பௌத்த பிக்குகளால் மாறிவரும் உலகின் புவிசார் அரசியல் நிலைமைகளை விளங்கிக்கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பதும். சர்வதேச ரீதியானதும் அரசியல் ரீதியிலானதுமான பிரச்சினைகளில் அவர்களின் ஆலோசனைப்படி நடப்பது பொருத்தமாக அமைய முடியுமா? கடந்துபோன பொற்காலங்களைப் பற்றிய கனவுகளில் மிதக்கும் அவர்கள் தொடர்ந்தும் நவீனத்துவங்களால் மாற்றமடையும் உலகின் உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகள் பற்றி புரிந்துகொள்வது இன்று சாத்தியமாகப் போவதில்லை. கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தா

ஆனால், இவையாவற்றிற்கும் பெரும் தடைக்கல்லாக, முட்டுக்கட்டையாக விடுதலைப் புலிகள் உள்ளனர். தமிழீழம் என்ற அவர்களின் நிலைப்பாடு தமிழர் தாயகத்தைப் பற்றி நிற்கின்றது. இதன் காரணமாகவே புலிகளை அழித்தல் என்பது தமிழர் தாயகத்தை சிதைத்தல் என்பதற்கு சமனானதாக சிங்கள பேரினவாத சக்திகளால் கருதப்படுகின்றது.

ஆனால், கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களோ, புலிகள் ஒழிக்கப்பட்டால் பிரச்சினை முடிந்தது. வடக்கு கிழக்கு இணைந்த ஓர் அரச அமைப்பு தமக்குக்கிடைக்கும் எனக் கற்பனையில் மூழ்கியிருக்கின்றன. சிலர், சிங்கள பேரினவாதிகளே தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து விடுவார்கள் என எண்ணுகின்றன. சிலர் புலிகள் ஒழிக்கப்பட்ட பின் இந்தியா தலையிட்டு தமது பிரச்சினையைத் தீர்த்து வைத்து தமிழர் தாயகத்தை காத்துவிடும் என கனவு காணுகின்றனர்.

ஆனால், புலிகள் இருக்கும்வரை தான் தமது வாழ்வு என்பதை இவை மறந்துவிடுகின்றனர். புலிகள் இல்லாது போனால், இரவோடு இரவாக இவர்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் மறைக்கப்பட்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிறிலங்கா அரசாங்கத்திற்கு இதில் போதிய தேர்ச்சியும் உண்டு. இல்லாது போனால், பத்திரிகையில் கண்டன அறிக்கை விடுவதோடுமட்டும் தமது அரசியலை நடத்திக் கொண்டிருக்கலாம்.

இதேவேளை, இந்தியா தலையிட்டு தமிழர் தாயகத்தை காத்து இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் என எண்ணும் சிலருக்கு சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் என். என். ஜாவின் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் ஞாபகமூட்டப்பட வேண்டியவை. "தாயகம்" என்ற வார்த்தை திரும்பத் திரும்ப பயன்படுத்துவதே குழப்பத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என 'ஜா' குறிப்பிட்டார். இலங்கையில் தமிழரின் தாயகம் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறாக இருக்கும் என்பதை புரிந்து கொள்ளப் போதுமானதாகும்.

ஆனால் இதில் எதையும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் கருத்திற் கொள்ளவில்லை. சிறிலங்கா இராணுவம் எவ்வளவு விரைவில் வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவில், மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவதோடு, ஒத்துழைத்தும் வருகின்றன. அதாவது தமிழர் தாயகத்தை எவ்வளவு விரைவில் காட்டிக் கொடுக்க முடியுமோ, அன்றிச் சிதைக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அது நடைபெற வேண்டும் என தீவிரமாக உள்ளன. இவர்களின் இந்த நிலைப்பாடு, மகன் இறந்தாலும் பரவாயில்லை. மருமகள் விதவையானால் போதும் என்பதை ஒத்ததாகவுள்ளது.

---

...கேள்விக்கு இடமின்றி ஏற்றுக் கொண்டிருப்பீர்கள். ஆனால் இடபோது நீங்கள் வளர்ச்சியடைந்தும் பக்குவப்பட்டும் இருப்பீர்கள் என்பதால் புத்திசாலித்தனமாகவும், தெளிவாகவும் விடையங்களைப் பார்க்க முடியும் என்று நம்புகிறேன்.

4. சிங்களதேசம் மனிதவளத்தையும், பொருளாதார மூலங்களையும் கூட ஏனையவர்களை அழிப்பதற்குப் பயன்படுத்தி வருகின்றது. அமைதி காண்பதற்கு அவர்கள் தமது அணுகுமுறையையும், மனவிருப்பங்களையும் மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. அமைதியின் பாதையில் பயணம் மேற்கொள்வதற்காக இந்த அணுகுமுறை மாற்றம் ...குண்டுகளைப் போடுவதன் மூலமும் இது நிரூபணமாகவில்லையா? இவற்றுக்காக உண்மையில் சாதாரண சிங்களப் பொதுமக்கள் நாணித் தலைகுனிய வேண்டும். ஹிட்லர் கூட யூதர்களுக்கு எதிராக இவ்விதம் நடந்து கொள்ளவில்லை. சதாம் ஹுசைன் கூட குர்திஷ் மக்களுக்கு எதிராக இவ்விதம் நடக்கவில்லை. இது சிங்களவர் மத்தியில் தமிழர்கள் மீது உள்ள வெறுப்புணர்வின் உச்சத்தை வெளிக்காட்டுவதோடு அமைதி ஏற்படுவதற்காக அவர்களின் மனநிலை மாறுவது எத்தகைய கடுமை நிறைந்தது என்பதையும் கோடிட்டுக் காட்டுவதாகும். இப்போதும் கூட நல்ல தலைமைத்...

...எடுக்கப்படல் வேண்டும். பேரரசுகள் சரிந்து போனதையும், நாடுகள் தமக்கிடையிலான உறவுகளைப் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் வளர்ப்பதையும் உலக வரலாறு கண்டுள்ளது. இப்போதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைய விரும்புகின்றன. இலங்கைத் தீவு அளவில் சிறியது. ஆதனால் பிரிந்து போகக் கூடாது என்பது ஏற்புடையதல்ல. ஏனெனில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை விடவும் சிறு நாடுகள் பல உள்ளன. உதாரணமாக மொனாகோ, பிலிசி போன்றவற்றைக் குறிப்பிடலாம். அது மக்களின் விருப்பத்தைப்...

...செய்துள்ளார்? இது உங்கள் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தபோதிலும் பாதுகாப்புக் கொள்கை வகுப்பதில் நீங்களும் பங்குதாரர் என்ற முறையில் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டியிருக்கும் அல்லவா?

8 உங்களின் அதியுயர் இராணுவப் பயிற்சி உங்களுக்குப் போதிப்பது என்ன?

தமிழர்களின் நலன்களைக் காக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் தமிழகத் தமிழர்களும், தமிழீழத்தமிழர்களும் மலையகத் தமிழர்களும் ஒத்தகருத்தில் செயற்படும் ஒரு காலம் வரும்போது நீங்கள் அனைவரும் தனித்துப்போய் நிற்கும் நிலைவரும்.

...லுள்ள பிரிட்டன் உயர் ஸ்தானிகர் கண்டியிலுள்ள மகாநாயக்க தேரோவிடம் போய் அரசியல் பேசுவது மடத்தனமானதும், தவறானதும் ஆகும்.

10. தற்போது உங்களுடைய நிலையில் நீங்கள் சிறிலங்காவின் பாதுகாப்பு கொள்கையிலும் இராணுவ தந்திரோபாயத்திலும் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்பதால் அமைதி காண்பதற்காக உங்களுடைய ஆளுமையைப் பயன்படுத்தும்படி நான் வேண்டிக்கொள்கிறேன்.

இவண் மெய் பேணும்
ஏ ஜே என் செல்லத்துரை

நன்றி தமிழ் நேசன்

---

அமெரிக்க ரஷ்யத்தலைவர்கள்

## பதினைந்து ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள்

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ரஷ்யஜனாதிபதி பொரிஸ் யெல்சினும் அடுத்த வாரம் பதினைந்து ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வாரம் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேக்கருக்கும் ரஷ்ய வெளிநாட்டமைச்சர் கொஸிரேவுக்குமிடையில் லண்டனில் நடைபெற்ற மூன்று மணிநேர பேச்சுக்களுக்குப் பின்னர் இந்த உடன்பாடு கண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தங்களில் நீண்டதூரம் செல்லும் அணு ஆயுதங்களை பாரதூரமாகக் குறைப்பது வானவெளி ஒத்துழைப்பு ஒப்பந்தம், ஏவாயுத பிரயோகம் குறித்து முன்னெச்சரிக்கை தெரிவிக்கும் ஒப்பந்தம் என்பனவும் அடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் ஆசிரியர்கள்

## சூழ்நிலைகளுக்கு ஏற்ப கற்பிக்க வேண்டும்

-சின்னக்கறுப்பன்

(சிங்கப்பூர்)

தமிழ் ஆசிரியர்கள் தங்கள் நாடுகளின் சூழ் நிலைகளுக்கு ஏற்ப புதிய அணுகு முறைகளையும், நவீன தொழில் நுட்பக் கருவிகளையும் பயன்படுத்தி தமிழ் மொழியை சுவையோடு கற்பிக்க வேண்டும் என்று சிங்கப்பூர் பாராளுமன்ற உறுப்பினர் சின்னக்கறுப்பன் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய உலகத் தமிழ் ஆசிரியர்கள் முதல் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா, மொரீசியஸ் தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து பல பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## டாக்டர் ராமதாசுக்கு 17 நாட்கள் சிறை

(சென்னை)

தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்ததாக நேற்று முன்தினம் திண்டிவனத்தில் கைதுசெய்யப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் என்.ராம்தாஸ் பதினேழு நாள் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாட்டாளி மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இதே நேரம் கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனே விடுதலை செய்யும்படி தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கேட்டுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி வன்முறைப் போராட்டத்தில் இறங்காத வேளையில் அதன் தலைவர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## தீக்கிரை

[சென்னை]

திருச்சியை அடுத்துள்ள சின்னசாமி நகரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்து ஒன்றில் நூற்றுக்கும் அதிகமான குடிசைகள் எரிந்து நாசமாகியுள்ளன. இதனால் ஏற்பட்ட சேதம் ஒருலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என்றுமதிப்பிடப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில்

## கலப்பு இன அரசமைக்க ஏ.என்.சி ஆர்ப்பாட்டம்

[கேப்டவுண்]

தென் ஆபிரிக்காவில் கலப்பு இன அரசை அமைக்க வேண்டும் எனக்கோரி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ. என் சி) கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த மாத இறுதிக்குள் கலப்பு இன அரசை மத்திய அரசு அமைக்கவேண்டும் என ஏ. என் சி. கேட்டுள்ளது. இது குறித்து நேற்று தென் ஆபிரிக்காவில எழுபதுபேரணிகளை ஏ என். சி நடாத்தியது

எதிர்கால இடைக்கால அரசில் பாராளுமன்ற மேல்சபைக்கு அதிகாரங்கள் வழங்குவது குறித்து பல கட்சிகள் கலந்து கொண்ட பேச்சுக்களில் தேக்கநிலை ஏற்பட்டதை அடுத்து அரசுக்கும் ஏ. என் சிக்கும் இடையே முரண்பாடான நிலை உருவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் இவர்களின் பேரணிகளை கட்டுப்படுத்துவதற்காக மத்திய அரசு மேலதிக பொலிசையும், இராணுவத்தையும் அழைத்துள்ளது.

## அமெரி.ஜனாதிபதிதேர்தல்; புஷ்சிற்கு நெருக்கடி

(வாஷிங்டன்)

அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வி அடையக் கூடும் என்பதை எம்மால் உணர முடிகிறது'' என்று புஷ்ஷின் பிரசார இயக்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் சார்ள்ஸ் பிளேக் கூறியுள்ளார்.

சி.என்.என் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்துள்ள பேட்டியின்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் ஜோர்ஜ் புஷ் றேஸ் பெரோட் வெற்றி பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும்.

கடந்த பல வாரங்களாக நடத்தப் பட்ட மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புகள் றேஸ் பெரொட் மீது மக்களுக்கு இருக்கும் ஆதரவைப் பிரதிபலிப்பதாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்..

# ஈழநாதம்

## குண்டு வெடிப்பு

லண்டனின் மத்திய பகுதியில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றினால் பல வாகனங்கள் சேதமுற்றன எனினும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. அயரிஸ் குடியரசு இராணுவத்தினரே இக் குண்டு வெடிப்பு தாக்குதலை நடத்தியிருக்கலாம்

# இந்தியா - ரஷ்சியா கூட்டாக டாங்கிகள் விமானங்கள் உற்பத்தி

### ரஷ்சிய தூதுவர் தெரிவிப்பு

[டில்லி]

ரஷ்சியா, இந்தியாவில் கூட்டு முயற்சியாக டாங்கிகளையும், விமானங்களையும் உற்பத்தி செய்து மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்பனை செய்ய முன்வந்துள்ளது.

புதுடில்லியிலுள்ள ரஷ்சிய தூதரகப் பேச்சாளர் ஒருவர் இதுபற்றி தெரிவித்த பொழுது ரஷ்சியாவுக்கு ஆயுத விற்பனை மூலம் முக்கிய வெளி நாட்டு நாணமாற்றைச் சம்பாதித்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறையில் இந்தியா ரஷ்சியவுடன் நெருங்கிய ஒத்துழைப்பைக் கொண்டிருந்ததனால் அந்த நாட்டிற்கு இந்த துறை சார்ந்த திறமை இருக்கிறது எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்திய பாதுகாப்புதுறை அதிகாரி ஒருவர் இது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளார். அவ்வாறான கோரிக்கையை ரஷ்சியா விடுக்குமானால் அது பற்றி ஆராயப்படுமா என்பது பற்றியும் அவர் எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## நக்ஸலைட்டுகளுக்கு கண்ணிவெடிப் பயிற்சி புலிகள் அளித்தனராம்

### ஆந்திரப் பொலிஸ் அதிகாரி

(சென்னை)

கண்ணி வெடிகளில் நிபுணத்துவம் மிக்க விடுதலைப் புலிகள் உறுப்பினரொருவர் ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி ஒருவருடன் இணைந்து நக்ஸலைட்டுகளுக்கு கண்ணிவெடி வைப்பதில் பயிற்சி அளித்தனர் என்று ஆந்திர பிரதேசத்தில் கம்மம் மாவட்ட பொலிஸ் அதிகாரி ஏ. வி. நாராயணா தெரிவித்தார். சுமார் முப்பது அல்லது நாற்பது நாட்கள் நக்ஸலைட்டுகளின் மக்கள் போராட்டக் குழுவினருக்கு இப் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு மத்திய பிரதேசத்தின்பாஸ்டார் காட்டுப் பகுதியிலுள்ள கலிக்குண்டாலா என்ற இடத்திலிருக்கும் முகாமில் இப் பயிற்சி அளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது

மக்கள் போராட்டக் குழுவில் மாகாணக் குழு ஒன்று தமிழ் நாட்டிலிருப்பதாகவும், அதற்குப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் அந்தப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

ஆந்திரப் பிரதேசக் காடுகளில் கண்ணிவெடிப் பயிற்சி பெற்றவர்கள் ஐந்து முதல் எட்டுப்பேர்வரை உள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்

## வர்மா கமிஷன் அறிக்கை சமர்ப்பிப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தியைக் கொலை செய்த சம்பவத்திற்கு வழி வகுத்திட்ட பாதுகாப்புக் குறைபாடுகள் பற்றி விசாரணை செய்துவந்த வர்மா ஆணைக்குழு நேற்று முன் தினம் புதுடில்லியில் அதன் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது.

இரண்டு தொகுதிகள் கொண்ட இந்த அறிக்கையை ஆணைக்குழுவின் செயலர் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானிடம் ஒப்படைத்தார்.

சென்ற ஆண்டு மே 27 ஆம் திகதி இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

## அமெரிக்கா, சவுதி அரேபியா கூட்டு கடற்படைப் பயிற்சி

(துபாய்)

சவுதி அரேபியாவும், அமெரிக்காவும் அடுத்த மூன்று மாதங்களினுள் செங்கடலில் கூட்டாக இராணுவ பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளன.

துபாயில் நேற்று அமெரிக்...டன் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக குவைத், பஹ்ரெயின், கட்டார் ஆகிய நாடுகள் ஏற்கனவே உடன்பாடுகளைச் செய்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

### பூமிப் பாதுகாப்பு மாநாடு

## எல்லா எதிர்பார்ப்புகளும் பூர்த்தி செய்யப்படவில்லை

(றியோடிஜெனரோ)

அனைத்து எதிர்பார்ப்புகளையும் பூர்த்திசெய்யாதபோதும் பாதுகாப்பானதும், சுத்தமானதுமாக பூமியை ஆக்குவதில் முன்னேற்றகரமான முதற்படி எடுத்து வைக்கப்பட்டிருப்பதாகப் பல்வேறு உலகத்தலைவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிறேசில் தலைநகர் றியோடி...தான் பிரதமர் நவாப் ஷெரீப் ''சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்களாகவும், அதற்கான தீர்மானத்தை மேற்கொண்டவர்களாகவும் இங்கிருந்து செல்கிறோம்'' எனக் குறிப்பிட்டார்.

## நிதிப்பற்றாக்குறை

### டாக்டர் ராமதாஸ் கைது

## பொலிசார் மீது கல்லெறி வாகனங்கள் தீக்கிரை

[சென்னை]

வேலூர் சிறையில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் அடைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து அவரது கட்சித் தொண்டர்கள் பெரும் வன்முறைகளில் இறங்கியுள்ளனர். காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது இவர்கள் கல்லெறி நடத்தியதில் ஒரு அதிகாரி காயமடைந்தார். அதையடுத்து துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாயினும் எவரும் காயமடைந்ததாகத் தெரியவில்லை. இதேவேளை இரண்டு றக் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் பல வாகனங்களின் கண்ணாடிகளும் அடித்து நொறுக்கப்பட்டு உள்ளது.

### வட,கிழக்கு போரில் பாதிப்புற்ற

## படையினர் மறுவாழ்விற்கு புதிய பயிற்சி நிலையம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் போரில் பாதிக்கப்பட்ட படையினருக்கு புனர்வாழ்வு அளிக்கவும் வேலை வாய்ப்புக்களை வழங்கவும் குருநாகல் மாவட்டத்தில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது

பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ள ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் இந்நிலையம் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது

பொலிஸாருக்கும், ஆயுதப் படையினருக்கும் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் இந்த நிலையம் பயிற்சி அளிக்கும்.

சொந்த வீடு இல்லாதவர்களுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளின் போது காணித்துண்டுகள் வழங்கப்பட்டு வீடுகளை கட்டுவதற்கான உதவிகளும் செய்யப்படும்.

இந்த நிலையம் சிவில் பாதுகாப்பு பயிற்சித் திட்டங்களையும் முன்னெடுக்கும் என்று பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்து உள்ளார்

### யு. எஸ். எயிட்

## விவசாய அபிவிருத்திதிட்டம் தோல்வியடைந்தது

யாழ். மாவட்டத்தில் ''யு. எஸ். எயிட்'' ஸ்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்வாண்டுக்கான விவசாய அபிவிருத்தித் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

மேற்படி விவசாய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விவசாய முயற்சிகள் எதுவும் எதிர்பார்த்த விளைவுகளைக் கொடுக்கவில்லை என்று யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். சுமார் மூன்றில் ஒரு பங்கிலும் குறைவான விளைவுகளையே விவசாயிகள் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்திய காலம் திட்டத்திற்கு விவசாயிகளைத் தெரிவு செய்தல், விவசாய உள்ளீடுகளை வழங்கல் போன்ற விடயங்களில் ஏற்பட்ட தவறுகளே மேற்படி திட்டம் தோல்வியடைவதற்குரிய காரணங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (ஈ)

### சுதந்திரக்கட்சிக்கு

மொஸ்கோவுக்கு நன்றி கூறி பாராளுமன்ற ஆசனங்களைகூட தலாக கைப்பற்றிபதினால் ஏற்பட்டிருக்கும் செல்வாக்கை அனுகூலமாக பயன்படுத்தி இலங்கையின் மேற்குலக ...

## ஜனாதிபதி தேர்தலில் ராம் ஜெத்மலானி

பிரபல சட்டத்தரணியும், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினருமான ராம் ஜெத்மலானி இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை நேற்று தாக்கல் செய்தார்.

## யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொள்ளவும்

யாழ் மாவட்டத்தில் இருந்து கொழும்பிற்கு நச் சென்று வங்கிகளில் வேலை வாய்ப்பை பெறுவதற்கான போட்டிப் பரீட்சையை எழுதி சித்தி அடைந்தவர்களை உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளும்படி யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

மேற்படி பரீட்சை எழுதியோர்களில் சித்தி எய்தியவர்களின் பெயர் விபரங்கள் யாழ். செயலகத்தில் உள்ளது இவர்களுக்கு வங்கிகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த நடவடிக்கையை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார் என தெரிய வருகின்றது. (ஜ)

## பணமாக ஒய்வூதியம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் தற்போது தனது பணியை மேற்கொண்டுவருகிறது.

மேற்கொள்ளவில்லை.

துபாயில் நேற்று அமெரிக்கக் கடற்படைப் பிரிவு ஒன்றின் கமாண்டர் செய்தியாளர்களுக்கு இதனைத் தெரிவித்தார். அமெரிக்கக் கடற்படை ஏற்கனவே குவைத், பஹ்ரெயின், கட்டார், ஓமான் ஆகிய நாடுகளுடன் பயிற்சி நடத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அமெரிக்காவு

வரும் செய்திகள் கூறுகின்றன.

## சர்வோதய

மறைவாகி விட்டனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் வவுனியா சர்வோதய அலுவலகக் கணக்காளரை கைது செய்து நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்தனர்.


Yogi's
Cake And Sugar Graft
Exhibition

மேற்படி கேக் கண்காட்சி
18-6-92 வியாழக்கிழமை காலை 7-15 மணிக்கு
யாழ். அரச அதிபர்
திரு. கே. மாணிக்கவாசகர் அவர்களால்
ஆரம்பித்து வைக்கப்படும்

18-6-92 தொடக்கம், 22-6-92 வரை
காலை 9-00மணி தொடக்கம் மாலை 6-00 மணிவரை
தினமும் கண்காட்சி நடை பெறும்.

நடைபெறும் இடம்:-
யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி
71B, நாயன்மார் வீதி,
கச்சேரி - நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[2685]


## மரண அறிவித்தல்

### இராமநாதர் கதிரவேலு

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் பெருங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முரசுமோட்டை முதலாம் யூனிட்டில் வசித்தவருமான இராமநாதர் கதிரவேலு (சிவலைக் கதிரவேலு) என்பவர் 16-06-92 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 17-06-92 இன்று மாலை 2-00 மணிக்கு முரசுமோட்டை வெள்ளுவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்,

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்
சு. சந்திரசேகரம்

(2088)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


பிறேசில் தலைநகர் றியோடி ஜெனரோவில் நடைபெற்ற புவி உச்சிமாநாடு நேற்றுமுன் தினம் முடிவுற்றதையடுத்து அங்கிருந்து புறப்படும் முன் கருத்து வெளியிட்ட பாகிஸ்

## நேரடி சேவை

கொழும்புக்கும், புதுடில்லிக்குமான நேரடி விமான சேவை நடத்துவது பற்றி ஏயர்லங்காவும், இந்தியன் எயர்லைன்சும் ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது.

91-92 ஆம் நிதியாண்டில் இரு நாடுகளுக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்து 16.5 சதவிகிதம் அதிகரித்திருப்பதாகவும் தெரியவருகிறது. தற்போது கொழும்பு-திருச்சி, கொழும்பு - திருவனந்தபுரம், கொழும்பு சென்னை மார்க்கங்களில் விமானப்போக்குவரத்துஇடம் பெற்றுவருவது தெரிந்ததே-

## மேலதிக

செயலக உயர் அதிகாரி கருதுவதாக கூறப்படுகிறது. ஏனைய இரு அதிகாரிகளில் அண்மையில் வெளிமாவட்டம் ஒன்றில் இருந்துஇங்கு இடமாற்றம் பெற்ற ஒருவருக்கே மேற்படி உயர் அதிகாரியின் ஆசீர்வாதம் இருப்பதால் இப் பதவிக்கு அவரே நியமிக்கப் பட இருக்கிறார்.

இந்த நியமனத்துக்காக கடந்த பல வாரங்களாக சில அதிகாரிகளிடையே பனிப் போர்நிலைமைகாணப்பட்டது என்பதுகுறிப்பிடத்தக்கது (ச)

## தாண்டிக்குளம்

எனினும் கொழும்புக்குச் செல்லும் யாழ்தேவி தனது பயணத்தை வவுனியாவில் ஆரம்பிக்கும் என்றும்ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன

இதுகாலவரை கொழும்பிலிருந்து ரயில் மூலம் வவுனியா வந்து சேரும் யாழ். பயணிகள் அங்கிருந்து பஸ் மூலம் தாண்டிக்குளத்துக்கு பயணம்செய்து வந்தனர். தாண்டிக்குள இராணுவத் தடைமுகாம் சோதனையின் பின்னரேபயணத்தை தொடர அனுமதிக்கப் பட்டிருந்தனர். வவுனியாவிலிருந்து இரண்டு மைல்களுக்கப்பால் தாண்டிக்குளம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நிதிப்பற்றாக்குறை

# மேலதிக மாணவர்களுக்கு அனுமதி வழங்க மறுப்பு

பல்கலைக்கழகங்களுக்குகூடுதலான நிதி ஒதுக்காதவரை மேலதிக மாணவர்களை அனுமதிக்க முடியாது என கொழும்பு பல்கலைக் கழக பீடாதிபதிகள் உயர் கல்வி அமைச்சுக்குத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டு 8000 மாணவர்களை அனுமதிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் தான் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அரசின் தீர்மானப்படி இம் மாணவர்களை அனுமதிப்பதனால் மேலதிக நிதியாகப் 10 கோடி ரூபா தேவைப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட்ட போதிலும் அவர்களின் தேவைகளை கவனிப்பதற்கு நிதி அதிகரிக்கப் படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்து.

நிதியில்லாமையினால் இடநெருக்கடி, தளபாடம்

போதாமை போன்ற பிரச்சினைகள் தோன்றியிருப்பதாகவும் அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றால் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்து, மாணவர் தெரிவுப் பட்டியல் காலம் தாழ்த்தியே வெளியாகும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன [50

## அதிகாரி

மாவட்டத்தில் 32 பாடசாலைகளில்ஆரம்பிக்கப்பட்டது. இங்கு அறுபது பயிற்சி நெறிகள் நடாத்தப்படுகின்றன.

இவ்வாண்டுக்கான புதிய பயிற்சி நெறிகளைஆரம்பிப்பதற்கான நிதி இம்முறை அரசினால் மிகக் குறைந்தளவே ஒதுக்கப்பட்டுள்ளது. அறுபது பயிற்சிகளை நடாத்துவதற்கு ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்கப்படல் வேண்டும். ஆனால் இம்முறை ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா மட்டுமே அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால் இம்முறை பதினைந்து பயிற்சி நெறிகளையே ஆரம்பிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது

மேற்படி பயிற்சிநெறிதிட்டமிட்டபடி இம்மாதம் ஆரம்பிக்கப்படின் இரண்டாயிரத்து நானூறு பேர் இதனால் பயனடைவர். (ச)

## வீரச்சாவு

(கார்த்திகேசு சேதீஸ்வரன், பூனகரி நெப்பிளே) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

டிருக்கின்றனர்.

## திருநாள்

இடம்பெயர்ந்துள்ள வெற்றிலைக்கேணி பங்கு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 22 ஆம் திகதி செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியர் ஆலயத்தில் "வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலய விழா" கொண்டாடப்படும். 21 ஆம் திகதி மாலை 6 மணிக்கு திருப்பலியும், நற்கருணை வழிபாடும், 22 ஆம் திகதி காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

## பாதுகாப்பு

எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்வது தெரிந்ததே

இதனால் நேற்று முன்தினம் இரவு மண்டைதீவு பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அராலித்துறையை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.இதன்போது தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் கொட்டடி, நாவாந்துறை, சோனகதெரு, பகுதிகளில் வாழும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் யாழ். போதனாவைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் வீதியோரங்களில் தஞ்சமடைந்திருந்தனர்.

குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் நேற்று முன்தினம் இரவு முழுவதும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நடைபாதைகள், நவீன சந்தைக் கட்டடம் ஆகியவற்றில் தஞ்சமடைந்திருந்ததை காணமுடிந்தது, (ச)

இலங்கையின் மேற்குலக சார்பு வெளிநாட்டுக் கொள்கையையும் ஆளும் ஐ.தே.க.வின் ஜனநாயக விரோத உள்நாட்டு நடவடிக்கைகளையும் தனது கட்சி தடுக்க முயற்சிக்கும் என உறுதி அளித்ததாகவும் கிரியுச்கோவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவில் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு என (முன்னாள்) சோவியத்கம்யூனிஸ்ட் கட்சி இரகசிய நிதியம் ஒன்றை வைத்திருந்தது என்ற தகவலும் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்த விசேட நடவடிக்கைகளில இந்தியாவில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதும் அடங்கும்

சோவியத் பத்திரிகையில் தற்போது வெளியிடப்பட்டிருக்கும் தகவல்களின்படி 1969 இல் கே.ஜி.பி. இன் தலைவராக இருந்த யூரிஆந்திரபோவ் ஜெருசலேத்தில் பள்ளிவாசல் ஒன்று கொளுத்தப்பட்ட சம்பவத்துக்கு எதிராக டில்லியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஒழுங்கு செய்ய சோவியத் தலைமைப் பீடத்திடம் அனுமதியைக் கோரியிருந்தார்

மொஸ்கோ நியூஸ் என்ற வாரப் பத்திரிகையில் 1969 ஆகஸ்ட் 28இல் ஆந்திரபோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய இரகசியக் கடிதம் ஒன்றையும் கடந்த ஜூன் 10 இதழில் பிரசுரித்துள்ளது.

பணியை மேற்கொண்டுவருகிறது,

இத்தப நோ. கூ. சங்கத்தின் கிராமிய வங்கியில் ஓய்வூதியம்பெற்றுவந்தவர்களுக்கு 16-06-92 தொடக்கம் அவர்களுக்கான கொடுப்பனவு பணமாக வழங்கப்படுவதாகவும் மேற்படி சங்கத்தின் கிளைகள் வழங்கிய மாணவர்உணவு முத்திரைக்கானபொருள்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் அச்சங்கம் மேலும் தெரிவித்தது.

## குத்திக் கொலை

(மின்னேரியா)

மின்னேரியா ரயில் நிலைய அதிபர் வாஹல தந்திரிகே மேதிலக என்பவர் நேற்று முன்தினம் அடையாளம் காணப்படாத ஒருவரால் கத்தியால் குத்திக் கொலைப்பட்டார் என்று ஹிங்குராங்கொடை பொலிசார் தெரிவித்தனர்.

படுஓய என்ற கிராமத்தில் நடைபெற விருந்த நாடக விழா வொன்றுக்குச் செல்வதற்குத் தயாரான போதே இவர் குத்திக் கொலைப்பட்டதாகப் பொலிசார் குறிப்பிட்டனர்.

## தீவுப்பகுதி

தினரின் இக் கண்மூடித்தனமான தாக்குதலினால் பல வீடுகள் சேதமடைந்தன எனினும் பொதுமக்கள் எவரும் காயமடையவில்லை என தெரியவருகிறது. (பா

## வாகன வரிசை இலக்கம்

### 16-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4400

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3600

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:-3550

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

27-557, 42-3239, 24-9609, 28-1049, 40-1352, 26-8430, 27-5217, 43-517, 26-4003, 26-3628, 41-5178, 24-6475, 28-8951, 27-8283, 72-9437, 28-2145, 26-5405, 28-1928, 26-4683, 27-1187, 28-9249, 26-2737, 36-1094, 25-4250, 25-2078, 25-1334, 36-8889, 36-7006, 71-7321

வடபகுதிக்கு உள்ளே இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

27-9707, 24-8700, 26-1745, 26-5474, 41-9457, 40-2829, 27-5187, 24-853 36-6822, 36-380, 37-4077, 25-545, 36-3334, 36-6155, 25-1972, 36-5599, 70-5864